ளவு கேஸ்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இன்ஸிடன்ஸ் 1980-ல் 1,000க்கு 3 என்றிருந்தது 1985-ல் 1000-க்கு 2 என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

786—(*வினா எண் 6668) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் சிவகிரி பகுதியில் தொழுநோய் அதிகமாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) சிவகிரியில் ஒரு தொழுநோய் சிகிச்சை மையத்தோடு சங்கரன்கோவிலிலும் புதிய கட்டிடம் கட்டப்பட்டு தொழுநோய்க் கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 9–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத் தில்தான் அதிகமாக தொழுநோய் இருக்கின்றது என்று சொல் லப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலேதான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரியிலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலும் இந்தத் தொழுநோய் அதிகமாக இருப்பதற்குக் காரணம் இந்த கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலே பணி செய் வதால்தான் என்ற கருத்து நிலவுகிறது. இதை அரசு அறிந் திருக்கிறதா அரசு இதற்காக ஆராய்ச்சி ஏதேனும் ஏற்படுத்தி யுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தனியாக ஆராய்ச்சி எதுவும் செய்யப்பட வில்லை என்றாலும், திருநெல்வேலி மாவட் டத்தைப் பொறுத்த வரையில், ''பிரிவெலன்ஸ்'' எவ்வளவு பேருக்கு தொழுநோய் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே 1,000-க்கு 9.1 தான் இருப்பதாகத் தெரி கின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆயிரத்திற்கு 13.8 அளவிற்கு உள்ளது. ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற சராசரியைவிட திருநெல்வேலி மாவட்டத்தில் குறை

வாக இருக்கிறது. அதே நேரத்திலே சிவகிரியைப் பொறுத்த வரை, There are 7,616 known cases upto the end of October 1985, out of which 5,485 cases are under treatment.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டிலே தொழுநோய் பரவலாக இருக்கின்றது. ஹைதராபாத்திற்கு வெளிநாட்டிலே இருந்து வந்த தொழுநோய் நிபுணர் இங்கிலாந்தில் 6,000 பேர்களுக்கு தொழுநோய் இருப்பதாகவும், ஹைதராபாத்தில் 6 இலட்சம் பேர்களுக்கு இருப்பதாகவும் கூறினார். 80 சதவீதம் பரவலாக தொற்று நோய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொழுநோய் இருந்தால் சட்டப்படி சட்டசபைக்கு போட்டியிடக்கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டம் ரத்து செய்யப்படுமா ? தொழுநோயாளிகளை சமுதாயத்தின் ஒரு அங்கமாகக் கருதி, அவர்களையும் போட்டியிட அனுமதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை '' ரீப்பீல் '' செய்ய தமிழ்நாடு அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரிப் பகுதியிலுள்ள தொழுநோயை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்று இப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு சங்கரன்கோயிலில் அதற்காக ஒரு ஆஸ்பத்திரி கட்டிடமும் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். சிவகிரியில் தான் அதிகமாக தொழுநோய் இருக்கிறது. சங்கரன்கோவிலில் அவ்வளவு அதிகமாக இல்லை. நமக்கு மகிழ்ச்சிதான். சிவகிரியில் இருக்க விரும்பாத டாக்டர்கள் அங்கே தேவையில்லை என்று சொல்லி, அங்கே அமைக்கப்படாமல் அதை சங்கரன்கோவிலுக்கு மாற்ற முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா ? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது ? சிவகிரியில் ஆஸ்பத்திரியைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்பட்ட அந்தக் குறிப்பு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.